# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2065/37 – 2018 අප්‍රේල් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා – 2018.04.05

***2065/37 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

*2016 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க*
*வட மாகாண சுதேச வைத்திய நியதிச்சட்டம்*

**வடக்கு மாகாண மாகாண சபை**

*வடக்கு மாகாண மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க வடக்கு மாகாண மாகாண சுதேச வைத்திய நியதிச்சட்டத்திற்கு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத் தரப்படுகின்றது.*

**க. தெய்வேந்திரம்,**
செயலாளர்,
பேரவைச் செயலகம்
வடக்கு மாகாண மாகாண சபை.

பேரவைச் செயலகம்,
ஏ9 வீதி, கைதடி,
*2018, ஏப்பிறல் 03.*

**வடக்கு மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க சுதேச வைத்திய நியதிச் சட்டம்**

*இது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 9 ஆவது அட்டவணையின் 1ஆவது நிரலில் குறிப்பிடப்படும் 'சுதேச வைத்திய முறைமை' விடயத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டு, சுதேச வைத்திய முறையை உபயோகித்து வடக்கு மாகாணத்தின் மக்களுடைய நோய்த் தடுப்பு, நோய் சிகிச்சை, சுகாதாரக் கல்வி மற்றும் சுதேச வைத்திய சமூக சுகாதார சேவைகளை ஆரம்பித்து பராமரித்துக் கொள்ளுதல், சுதேச வைத்திய நடவடிக்கை முன்னேற்றம் மற்றும் பாதுகாத்தல் சுதேச வைத்திய நிறுவனங்கள் அமைத்தல், பராமரித்துக் கொள்ளுதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அதற்கு அவசியமான வசதிகள் வழங்குதலுக்காகவும், மூலிகைத் தோட்டங்களை உருவாக்கி பராமரித்துக் கொள்ளுதல் மற்றும் விரிவாக்குதலுக்காகவும், வடக்கு மாகாணத்தின் சுதேச வைத்திய நிறுவனங்கள் மற்றும் சுதேச வைத்திய சேவைகளில் ஈடுபட்டிருப்பவர்களைப் பதிவு செய்தல் மற்றும் அந்த நடவடிக்கைகளின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தலுக்காகவும் அதற்கு உரிய மற்றும் தொடரான விடயங்களுக்காகவும், ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான நியதிச் சட்டமாகும். இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேதச் சட்டத்துக்கு ஏற்புடையதாகாது.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடக்கு மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு சட்டமாக்கப்படுகின்றது.*

*சுருக்கப் பெயர் மற்றும் நடை முறைக்கு வரும் திகதி.*

*1. இந்த நியதிச் சட்டம் வடக்கு மாகாணத்தின் மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க சுதேச வைத்திய நியதிச் சட்டம் என அழைக்கப்படுவதுடன், வடக்கு மாகாணத்தின் ஆளுநருடைய அனுமதி பெற்ற திகதியிலிருந்து அது நடைமுறைக்கு வரும்.*



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

I ஆம் பகுதி

**மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் அமைத்தல் அதன் தொகுப்பு மற்றும் செயல் பொறுப்பு**

*மாகாண சுதேச வைத்தியத் திணைக்களம் அமைத்தல்.*

2. இந்த நியதிச் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வடக்கு மாகாணத்தின் சுதேச வைத்தியத் திணைக்களம் ஸ்தாபிக்கப்படும், (இதனகத்துப் பின்னர் திணைக்களம் எனக் குறிப்பிடப்படும்)

*வடக்கு மாகாண சுதேச வைத்திய ஆணையாளர் மற்றும் பணியாளர்கள்*

3. (i) இந்த நியதிச்சட்டத்தில், இதன் பின்னர் ''ஆணையாளர்'' எனக் குறிப்பிடப்படும் ''வடக்கு மாகாண சுதேச வைத்திய ஆணையாளர்'' என்ற பதவிக்குப்பொருத்தமான சேவையாளர் நியமிக்கப்படுவார்.இவர் திணைக்களத்தின் தலைவராக இருப்பார். இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கமைய அமுலாக்கும் பொறுப்பு இவரைச் சாரும்.

(ii) இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுலாக்குவதற்கு ஆணையாளருக்கு உதவும் பொருட்டு தேவையான சுதேச வைத்திய பிரதி ஆணையாளர்களும், உத்தியோகத்தர்களும் மற்றும் சுதேச வைத்தியர்களும் உள்ளடங்கலாக நியமிக்கப்படலாம்.

(iii) சுதேச வைத்திய ஆணையாளர், பிரதி ஆணையாளர் தவிர்ந்த திணைக்களத்திற்குரிய ஆளணியினரை நியமித்தல், பதவி உயர்வு வழங்குதல், ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பதவியிலிருந்து விலக்குதல் ஆகியவை 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் IVஆம் பகுதிக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

(iv) இந் நியதிச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்ட பதவியில் சேவையிலிருக்கும் சகல ஆளணியினரும் இந்நியதிச்சட்டத்திற்கு அமைவாக நியமனம் செய்யப்பட்டவர்களாகக் கருதப்படுவர்.

(v) இந்த நியதிச் சட்டத்தின் பிரகாரம் தனக்குப் பொறுப்பளிக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகளில் எவற்றையேனும் ஆணையாளரானவர் பொருத்தமான பதவியணியினருக்குக் கையளிக்க முடியும்.

*திணைக்களத்தின் நோக்கம்*

4. திணைக்களத்தின் நோக்கங்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறாகும்.

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 09 ஆம் அட்டவணையின் 01 ஆம் நிரலின் 12ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் சுதேச வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களை அமைத்தலும் பராமரித்தலும் சேவை வழங்கலும்.

(ii) சுதேச வைத்திய முறைக்கேற்ப வடக்கு மாகாண மக்களுடைய சுகாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு நோய்த் தடுப்பு மற்றும் சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளை முறையாகச் செயற்படுத்துதல்.

(iii) சுதேச வைத்தியத்திற்குத் தேவையான மருத்துவத் தாவர வகைகளை பாதுகாத்தலும் பயிரிடுதலும் மேம்படுத்தலும்.

(iv) (அ) சுதேச பாரம்பரிய யோகா முறைகள் ஏனைய மாற்றுமுறை மருத்துவங்கள் (சித்த, ஆயுர்வேத, யுனானி), ஆகிய பெயர்களில் அல்லது அதன்படி பொருள் கொள்ளப்படுவதான எந்த மருந்தகம், வைத்தியசாலை, மருந்து விற்பனை நிலையம், மர்த்தன நிலையங்கள் மற்றும் மருந்து உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றை ஒழுங்கு முறைப்படுத்தல்.

(ஆ) முதலாம் பந்தியில் உள்ள விடயங்களை ஒழுங்குபடுத்துகையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேண்டிய ஆலோசனை வழங்குதல், வழிகாட்டுதல் வசதியளித்தல்.

*திணைக்களத்தின் செயற்பாடுகள்*

5. திணைக்களத்தின்செயற்பாடுகள் பின்வருமாறு :-

(i) சுதேச வைத்திய சேவைகள் வழங்கும் வைத்தியசாலைகள், மருந்தகங்கள் மற்றும் சுதேச வைத்திய முறைகளுக்கு ஏற்ப நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அவசியமான வேறு நிறுவனங்களை அமைத்தல், அந்த நிறுவனங்களுள் பயனுள்ள மற்றும் வினைத்திறனான சுதேச வைத்திய சேவைகளைப் பராமரித்துக் கொள்ளுதல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துதல்.

(ii) சுதேச வைத்திய முறையின்படி மாகாணத்தின் மக்களுடைய சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகச் சுகாதாரத் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.

(iii) மாகாணத்தின் தேவைக்கேற்ப சுதேச வைத்திய முறையிலான மருத்துவமனைகளை, நிறுவனங்களை உருவாக்கிப் பராமரித்தல், நிர்வகித்தல்.

(iv) நோய் பராமரிப்புச் சேவைகளின் தரத்தினை முன்னேற்றுதல் மற்றும் சுதேச வைத்திய முறையை பிரபல்யப்படுத்துவதற்கு அவசியமான வழிமுறைகளை வகுத்தல்.

(v) சுதேச வைத்திய நிறுவனங்களில் சேவை ஆற்றுகின்ற ஆளணியினருக்கு அவசியமான அறிவூட்டல் மற்றும் பயிற்சிகளை வழங்குதல்.

(vi) சுதேச வைத்திய நடவடிக்கைகளில் ஈடுபடும் தனியார்,அரச சார்பற்ற நிறுவனங்கள், பகுதி அளவான அரசாங்க நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுடன் சம்பந்தமுடைய நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்கையில் உரிய நிறுவனங்களினால் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டுதல்கள், தரங்கள் மற்றும் அடிப்படை நியமங்களை வகுத்தல் அவற்றை நடைமுறைப் படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துதல்.

(vii) மூலிகைத் தோட்டங்களை அமைத்துப் பராமரித்துக் கொள்ளுதல்.

(viii) மருத்துவத் தாவரங்களைப் பயிரிடுவதற்கு ஆர்வப்படுத்துதல் மற்றும் அது தொடர்பான அறிவை மேம்படச் செய்தல்.

(ix) மாகாணத்தில் இயங்கும் சுதேச வைத்திய நிறுவனங்களுக்கு அவசியமான மருந்துகளை விநியோகிக்க அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் தரங்களுக்கு ஏற்புடையதான சுதேச வைத்திய உற்பத்தி நிலையங்களை அமைத்துப் பராமரித்துக் கொள்ளுதல்.

(x) மாகாண சமூக சுகாதார சேவைகளைப் பரவலாக்குவதன் மூலம் மக்களின் ஆரோக்கிய நிலமையை மேம்படுத்தல், நோய்த்தடுப்பு முறைகளை மேம்படுத்தல், பாரம்பரிய வைத்திய முறைகளை பாதுகாத்தல் மற்றும் அவசர அனர்த்த சந்தர்ப்பங்களில் சேவைகள் வழங்குதல்.

(xi) அங்கீகரிக்கப்பட்ட கொள்கை,மற்றும் நியமங்களுக்கு ஏற்புடையதாக சுதேச வைத்திய சேவைகளுக்கு அவசியமான மருந்து உற்பத்திக்கு ஊக்குவித்தல் மற்றும் அது தொடர்பான அறிவை மேம்படுத்துதல்.

(xii) மாகாணத்தின் மக்களுடைய சுகாதாரம் மற்றும் அதனை உயர்த்தும் பொருட்டு ஏற்படுத்தப்படும் சுதேச வைத்திய சேவைகளுக்கு உரிய தகவல்களைச் சேகரித்தல் மற்றும் வெளிப்படுத்தல்.

(xiii) சுதேச,பாரம்பரிய வைத்திய முறை தொடர்பான தகவல்களைச் சேகரித்தல், பாதுகாத்தல் மற்றும் பயனுடைத்தாக்கல்.

(xiv) திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் பொருட்டு நாட்டின் சட்டமுறைகளுக்கு ஏற்ப அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பொருத்தமான வளங்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளுதல்.

(xv) தேசிய கொள்கைக்கு ஏற்புடையதாக மாகாண சுதேச வைத்திய கொள்கையை வகுத்தல்.

திணைக்களத்தின் அதிகாரங்கள்

6. (i) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் திணைக்களத்தின் நோக்கங்களைப் பூர்த்தியாக்கிக் கொள்வதற்கு மற்றும் அதற்கு அளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகும் சகல அதிகாரங்களும் சட்டத்தின் எல்லைகளுக்கு உட்பட்டு திணைக்களத்துக்கு உரியதாயிருக்க வேண்டும்.

(ii) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவசியமான தகவல்கள், பதிவேடுகள் அல்லது அறிக்கைகள் ஆணையாளரால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்படுபவரினால் அரசாங்க அல்லது அரச சார்பற்ற ஏதும் சுதேச வைத்திய நிறுவனத்திடம் அல்லது தனியாளிடம் கோரப்பட்டால் அந்த நிறுவனம் அல்லது தனியாளினால் அந்தத் தகவல்கள், பதிவேடுகள் அல்லது அறிக்கைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

II ஆம் பகுதி

**சுதேச வைத்திய நிறுவனங்கள்**

*சுதேச வைத்திய நிறுவனங்களைப் பதிவு செய்தல்*

7. சுதேச வைத்திய நிறுவனமொன்று மாகாணத்திற்குள் செயற்படுவதாயின்,

(i) உரிய முறைப்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் அனைத்தும் ஆணையாளரால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

(ii) ஆணையாளரால் வழங்கப்படும் பதிவுச்சான்றிதழின்றி மாகாணத்தில் யாதொரு சுதேச வைத்திய நிறுவனத்தையும் பராமரித்துக் கொள்ளுதல் அல்லது நடைமுறைப்படுத்தல் கூடாது.

*பதிவு செய்யப் படும் சுதேச வைத்திய நிறுவனங்கள் சம்பந்தமாக ஆணையாள ருடைய அதிகாரங் களும் பணிகளும்.*

8. (i) சுதேச வைத்திய நிறுவனமாகப் பதிவு செய்வதற்கான எல்லா விண்ணப்பப்பத்திரங்களும் குறித் துரைக்கப்பட்ட மாதிரிப் படிவத்தின்படி பூரணப்படுத்தப்பட்டுஆணையாளருக்குச் சர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ii) மேற்படி விண்ணப்பமானது மாகாண ஆணையாளரால் அனுமதிக்கப்படுமிடத்து சுதேச வைத்திய நிறுவனத்தைப் பதிவு செய்து, விண்ணப்பதாரருக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கி கூறப்பட்ட அவ் வளாகம் உரிய சுதேச வைத்திய நிறுவனமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பம் நிராகரிக்கப்படுமிடத்து நியதிச் சட்டத்தின் கீழ் சுதேச வைத்திய நிறுவனமாகப் பதிவு செய்தல் சம்பந்தமாக விதிக்கப்படும் பிரமாணங்கள்/விதிகளுக்கு ஏற்புடையதல்லாத விண்ணப்பப் பத்திரத்தை நிராகரித்து அது பற்றி விண்ணப்பதாரருக்கு எழுத்தில் அறியத் தருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்பத்திரத்தை நிராகரிக்கும் ஆணையாளருடைய தீர்மானம் சம்பந்தமாக அதிருப்திக்கு உள்ளான விண்ணப்பதாரரொருவரால் அக் கூறப்பட்ட தீர்மானம் ஆணையாளரால் சுட்டிக்காட்டப்பட்ட காரணங்கள்/குறைபாடுகளைச் சரிசெய்தபின் விண்ணப்பதாரி மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

(v) மாகாண விடயப் பொறுப்பு அமைச்சரால் தீர்மானிக்கப்படும் பதிவுக் கட்டணம் ஏற்புடையதாகும்.

(vi) சட்டத்தின் பொது எல்லைகளுக்கு உட்பட்டு ஆணையாளருடைய எழுத்திலான அனுமதி பெற்ற யாதேனும் ஆளொருவர், சுதேச வைத்திய நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்ட ஏதும் நிறுவனம் அல்லது வளாகத்துக்கு அவசியமான எந்த நேரத்திலும் பிரவேசித்து,

(அ). கூறப்பட்ட அவ் வளாகத்தைப் பரிசோதிப்பதற்கு;

(ஆ). அங்கு இருக்கும் எவரேனும் ஒருவர் அல்லது நோயாளியொருவரிடம் விடயங்களை விசாரிப்பதற்கு;

(இ) அதனுள் பராமரிக்கப்படும் ஏதும் ஆவணங்கள் அல்லது அறிக்கையை பரிசோதிப்பதற்கு மற்றும் அக் கூறப்பட்ட ஆவணங்கள் அல்லது அறிக்கைகளின் பிரதிகளை எடுப்பதற்கு;

(ஈ) கூறப்பட்ட அவ் வளாகத்தின் உரிமையாளர் மற்றும் பொறுப்பாக இருக்கும் ஆளொருவர் சம்பந்தமாக இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் விதிக்கப்படும் விதிகள் அல்லது பிரமாணங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகள் வழங்குவதற்கு அதிகாரம் உடையவராவார்.

9. இந்த நியதிச் சட்டத்தின் கீழ் செயல்கள் மற்றும் செய்பணிகளை நிறைவேற்றுகையில் ஆணையாளரால் பொலிசாரின் உதவி கோரப்படலாம்.

III ஆம் பகுதி

10. (i) திணைக்களத்தால் குறித்துரைக்கப்பட்ட வகையில் அனுமதி பெற்றிருந்தாலன்றி எவரேனும்ஆள் வடக்கு மாகாணத்தில் சுதேச வைத்திய நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது.

*சுதேச வைத்திய சேவையில் ஈடுபட்டிருப்பவர் களைப் பதிவு செய்தல்.*

(ii) சுதேச வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ள,ஈடுபடவுள்ள சகலரும் இதற்கென விதிக்கப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம் தமது விண்ணப்பங்களை எழுத்து மூலம் ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரி மீண்டும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும்.

11. எவரேனும் ஒருவர், சுதேச வைத்திய சேவையில் ஈடுபட்டு உள்ளவராக பதிவு செய்யப்படுவதற்கு அவர்;

*சுதேச வைத்திய சேவையில் ஈடுபட்டு உள்ளவராக பதிவு செய்யப் படுவதற்கு அவசியமான தகைமைகள்.*

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படும் நடைமுறை விதிகளுக்கு அமைவானதாக குறித்துரைக்கப்பட்டதுமான தகைமைகளைக் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

12. சுதேச வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ள எவரேனுமொருவர் ஏதேனும் குற்றத்துக்கு, தோதான நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளி எனத் தீர்மானம் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் ஆணையாளர் அவரது பதிவை இடைநிறுத்தவோ அல்லது இரத்துச் செய்யவோ முடியும்.

*சுதேச வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ளவரது பதிவினை இடைநிறுத்தலும் இரத்துச் செய்தலும்.*

13. (i) பிரிவு 12 இன் கீழ் விண்ணப்பப் பத்திரத்தை நிராகரிக்கும் ஆணையாளருடைய தீர்மானம் சம்பந்தமாக அதிருப்திக்கு உள்ளான விண்ணப்பதாரரொருவரால் அக் கூறப்பட்ட தீர்மானம் அறியத்தரப்பட்ட திகதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள் கூறப்பட்ட அத் தீர்மானத்துக்கு எதிராகச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யமுடியும்.

*பதிவினை நிராகரித்தல் சம்பந்தமாக மேன்முறையீடு செய்தல்.*

(ii) செயலாளரால் கூறப்பட்ட அம் மேன்முறையீடு தமக்குக் கிடைத்து முப்பது நாட்களுக்குள் தமது தீர்மானத்தை விண்ணப்பதாரருக்கு அறியத்தர வேண்டும்.

14. வடக்கு மாகாணத்தில் பொருட்கள் சேவைகள் வழங்கலின் போது ஆணையாளருடைய எழுத்திலான அனுமதியின்றி "சித்த", "ஆயுள்வேதம்", "யுனானி", "பாரம்பரிய வைத்தியம்", "யோகாசன முறைகள்" ஆகிய சொற்களை உபயோகித்தல் ஆகாது.

*சுதேச வைத்திய த்தின் கீழ் வரும் "சித்த", "ஆயுள் வேதம்", 'யுனானி', "பாரம்பரிய வைத்தியம்", "யோகாசன முறைகள்" என்ற சொற்களைப் பாவித்தல்.*

IV ஆம் பகுதி

**குற்றம் மற்றும் தண்டனை**

15. பதிவு செய்யப்படாமல் சுதேச வைத்திய நிறுவனத்தை நடாத்தும் எவரேனுமொருவர் நீதிவான் முன்னிலையில் நடத்தப்படும் சுருக்கமான வழக்கு விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்டால் ரூபா ஐம்பதாயிரத்துக்கு மேற்படாத குற்றப் பணத்துக்கு அல்லது இரண்டு மாதங்களுக்கு மேற்படாத

சிறைத்தண்டனைக்கு அல்லது அக் கூறப்பட்ட குற்றப்பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய தண்டனைகள் இரண்டுக்கும் உட்பட்டவராதல் வேண்டும்.

16. பதிவு செய்யப்படாமல் சுதேச வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ள எவரேனுமொருவர் நீதிவான் முன்னிலையில் நடத்தப்படும் சுருக்கமான வழக்கு விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்டால் ரூபா இருபத்தையாயிரத்துக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனைக்கு அல்லது அக்கூறப்பட்ட குற்றப்பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய தண்டனைகள் இரண்டுக்கும் உட்பட்டவராதல் வேண்டும்.

17. இந்த நியதிச் சட்டத்தில் கூறப்படும் விடயங்களில் ஈடுபடும் உத்தியோகத்தருடைய கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கும் அல்லது நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமொருவர் நீதிவானொருவரின் முன்னிலையில் நடத்தப்படும் சுருக்கமான வழக்கு விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்டால் ரூபா ஐயாயிரத்துக்கு குறையாததும் ரூபா இருபத்தையாயிரத்துக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத சாதாரண சிறைத் தண்டனைக்கும் அல்லது அக் கூறப்பட்ட குற்றப்பணம் மற்றும் சிறைத்தண்டனைஆகிய தண்டனைகள் இரண்டுக்கும் உட்பட்டவராதல் வேண்டும்.

18. இந்த நியதிச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் விதிகள், ஒழுங்கு விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றை மீறுகின்ற எந்த அல்லது எவரேனுமொருவரால் குற்றம் செய்யப்படுமாயின் நீதிவானொருவர் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்கமான வழக்கு விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்டால் ரூபா இரண்டு இலட்சத்திற்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்துக்கான சிறைத்தண்டனை விதித்தலுக்கு அல்லது அக் கூறப்பட்ட குற்றப்பணம் மற்றும் சிறைத்தண்டனைவிதித்தல் ஆகிய தண்டனைகள் இரண்டுக்கும் உட்பட்டவராதல் வேண்டும்.

## Vஆம் பகுதி

### மாகாண சுதேச வைத்திய சேவைகள் ஆலோசனைச் சபை

*மாகாண சுதேச வைத்திய சேவைகள் ஆலோசனைச் சபை.*

19. மாகாண சுதேச வைத்திய சேவைகள் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக மாகாண சுதேச வைத்திய சேவைகள் ஆலோசனைச் சபை அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டும்.

*மாகாண சுதேச வைத்திய சேவைகள் ஆலோசனைச் சபையின் அமைப்பு.*

20. (i) மாகாண சுதேச வைத்திய சேவைகள் ஆலோசனைச் சபை (இதனகத்து பின்னர் ஆலோசனைச் சபை என குறிப்பிடப்படும்) கீழ்க் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

பதவிவழியாக பின்வருவோர் நியமிக்கப்படுவர்.

(அ) செயலாளர்.

(ஆ) ஆணையாளர்.

(இ) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லது அவருடைய பிரதிநிதியொருவர்.மேலும் நியமன உறுப்பினர்களாக பின்வருவோர் நியமிக்கப்படுவர்.

(ஈ) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்கள் ஐந்தையும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தில் அமைச்சரால் நியமிக்கப்படுகின்ற தகைமைகள் பெற்ற அரசாங்க சேவையில் இல்லாத, தேர்ச்சியுள்ள சுதேச வைத்திய தொழில் புரிபவர்கள்/ வைத்தியர்கள் ஏழு பேர். (05 சித்த, 01 யுனானி, 01 ஆயுள்வேதம்)

(உ) சமூக அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தில் நியமிக்கப்படும் உயர் தொழில் புரிபவரொருவர்.

(ii) ஆலோசனைச் சபையின் தலைவரானவர் விடயப் பொறுப்பு அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படுவார். ஆணையாளர் அதன் செயலாளராவார்.

(iii) (அ) ஆலோசனைச் சபையின் அங்கத்தவர்களுடைய பதவிக் காலம் இரண்டு வருடங்கள் ஆகவிருக்கும்.

(ஆ) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் சுய விருப்பின் பேரில் பதவி விலகுதல், மரணமடைதல் விடயப் பொறுப்பு அமைச்சரால் பதவியிலிருந்து நீக்கப்படுதல் அல்லது வேறு விதத்தில் பதவி வெறிதாக்குதல் அல்லது பதவிக்காலத்தின் முன் பதவியை வறிதாக்கினால் தவிர சகல நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து இரு வருடங்களுக்கு பதவியை வகிப்பதுடன், மீண்டும் நியமிக்கப்படுவதற்குத் தகைமையுடையவராவார்.

(இ) நியமிக்கப்பட்ட அங்கத்தவரொருவர் மரணம் அடைவதால், சுய விருப்பின் பேரில் விலகுவதால், அமைச்சரால் பதவியிலிருந்து நீக்கப்படுவதால் அல்லது வேறு விதத்தில் பதவியிலிருந்து வறிதாக்கும் சந்தர்ப்பத்தில் அமைச்சரால் அந்த அங்கத்தவருடைய மிகுதியுள்ள பதவிக்காலத்துக்காக வேறு தகுதியான அங்கத்தவர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியதாகும்.

(i) அங்கத்தவரொருவர் அமைச்சருக்கு முகவரியிட்டு அனுப்பும் கடிதம் மூலம் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமது பதவியிலிருந்து சுய விருப்பின் பேரில் பதவி விலக முடியும்.

(ii) ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் ஆலோசனைச் சபை கூட வேண்டியதாகும்.

(iii) ஆலோசனைச் சபையின் அங்கத்தவர்களின் நிறைவெண் நான்கு பேராயிருக்க வேண்டியதாகும்.

21. ஆலோசனைச் சபைக்கு அனுப்பப்படும் விடயங்கள் சம்பந்தமாக விடயப் பொறுப்பு அமைச்சருக்குப் பொருத்தமான விதத்தில் அவதானிப்பு, சிபாரிசு, ஆலோசனை சமர்ப்பித்தல், மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்தின் சேவைகளை முன்னேற்றம் செய்தல், மாகாணத்தின் சுகாதார நிலையைஅபிவிருத்தி செய்தல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பாக அவ்வப்போது சிபாரிசு மற்றும் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல் அக் கூறப்பட்ட ஆலோசனைச் சபையின் செயல் பொறுப்பாக இருக்கும். ஆலோசனைச் சபையின் செயல் பொறுப்பு.

## VI ஆம் பகுதி

### வைத்தியசாலை அபிவிருத்திக் குழு

22. (i) இந்த நியதிச் சட்டத்திற்குட்பட்ட மாகாண சுதேச வைத்தியசாலைகள், தள வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்கான அபிவிருத்திக் குழுக்கள் (இதனகத்து பின்னர் 'குழுக்கள்' என குறிப்பிடப்படும்) செயலாளரால் நியமிக்கப்பட முடியும். வைத்தியசாலை அபிவிருத்திக்குழு அமைத்தல் மற்றும் அவற்றின் அமைப்பு.

(ii) வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் அமைப்பு கீழ்க் குறிப்பிடப்படும் விதத்திலாயிருக்க வேண்டியதாகும்.

(அ) சம்பந்தப்பட்ட பிரிவின் பிரதேச செயலாளர் அல்லது அவருடைய பிரதிநிதியொருவர்.

(ஆ) பணிப்பாளர்/வைத்திய அத்தியட்சகர்/பொறுப்பு வைத்திய அதிகாரி.

(இ) உரிய நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்திலுள்ள சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் இரண்டு பேர்.

(ஈ) பிரதேசத்தில் இருக்கும் குறித்த வைத்தியசாலையைச் சேராத பதிவு பெற்ற சுதேச வைத்தியரொருவர்.

(உ) வைத்தியசாலைப் பணியாளர்களின் பிரதிநிதிகள் இருவர்.

(iii) குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகள் விடயப் பொறுப்பு அமைச்சருடைய உடன்பாட்டுடன் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(iv) அங்கத்தவர்களுடைய தேர்தலில் தெரிவு செய்யப்பட்டு நியமித்துக் கொள்ளப்பட்டவர் இந்தக் குழுவின் செயலாளராவதுடன், நிறுவனப் பொறுப்பு வைத்திய உத்தியோகத்தர் பதவி அதிகாரத்தால் இந்தக் குழுவின் தலைவராயிருப்பார்.

(v) (அ) இந்தக் குழுவின் பதவிக்காலம் இரண்டு வருடங்கள் ஆகும்;

(ஆ) விடயப் பொறுப்பு அமைச்சருடைய உடன்பாட்டுடன் நியமிக்கப்படுவதான அங்கத்தவர்களுடைய பதவிக் காலம் எவ்விதமான காரணத்திற்காகவேனும் குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன் வறிதாகினால் அந்த வறிதாகிய பதவிக்காக வேறு ஒருவர் அந்தப் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு நியமித்தல் விடயப் பொறுப்பு அமைச்சருடைய உடன்பாட்டுடன் செயற்பட முடியும். அவ்வாறு நியமிக்கப்படும் அங்கத்தவரொருவருக்கு தமது பதிலீட்டாளரான அங்கத்தவருடைய பதவிக் காலத்தில் காலாவதியாகாத பதவிக் காலத்துக்காக மட்டும் பதவியை வகிக்க முடியும்;

(இ) நியமிக்கப்பட்ட அங்கத்தவரொருவரை நியாயமான காரணங்கள் இருப்பின் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் விடயப் பொறுப்பு அமைச்சருக்கு உள்ளது. எந்த நியமிக்கப்பட்ட அங்கத்தவரெவரும் தமது பதவியிலிருந்து சுயவிருப்பின் பேரில் பதவி விலகிக் கொள்ளலாம்.

(vi) சகல கூட்டங்களுக்கும் தலைவர் தலைமை தாங்குவார்

(vii) இக் குழுவின் செயலாளர் கூட்டங்களுக்கான அறிக்கைகளை அவரே தயாரித்து கொள்ளுவார்.

(viii) வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் நிறைவெண் மூன்றாக இருத்தல் வேண்டும்.

(ix) குழுவின் செயலாளர் என்ற ரீதியில் செயலாளர் கூட்ட அறிக்கைகளை அமைச்சின் செயலாளருக்கும் ஆணையாளருக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயற்பாடுகள்.

23. அமைக்கப்படும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயற்பாடுகள் கீழ்க் குறிப்பிடப்படும் விதத்தில் இருக்க வேண்டியதாகும்.

(i) சம்பந்தப்பட்ட நிறுவனம் மற்றும் பொது மக்களுக்கு இடையில் இணைப்பை ஏற்படுத்துதல்.

(ii) நிறுவன அபிவிருத்தி மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

(iii) சேவை பெறுபவர்களுக்கு நிறுவனம் மூலம் தரமான சேவையை வழங்குவதற்கு பங்களித்தல்.

24. (i) அபிவிருத்திக்குழு மாதத்துக்கு ஒரு தடவையேனும் கூட்டப்படல் வேண்டும்.

(ii) குழு அங்கத்தவரொருவர் அல்லது அவருடைய துணைவர் உள்ளிட்ட குடும்பத்தின் உறுப்பினர் மாகாணத்தின் சுதேச வைத்தியசாலையுடன் எந்த ஒப்பந்தங்களையும் மேற்கொள்ள முடியாது.

(iii) தமது செயலை நிறைவேற்றுகையில் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் அங்கத்தவர்கள் முன் அனுமதி இல்லாமல் வைத்தியசாலைக்குள் பிரவேசித்தல் அல்லது வைத்தியசாலையைப் பரிசோதித்தல் அல்லது தமது குழு அங்கத்துவத்தின் மீது முறையற்ற செல்வாக்கை மேற்கொள்ளுதல் ஆகாது.

## VII ஆம் பகுதி

### ஒழுங்கு விதிகள்

அமைச்சரால் ஆக்கப்பட வேண்டிய விதிகள்.

25. (i) விடயப் பொறுப்பு அமைச்சர் பின்வரும் விதிகளை ஆக்கலாம்.

(அ) வட மாகாணத்தில் சுதேச வைத்திய நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளும் நிபந்தனைகளும்.

(ஆ) வட மாகாணத்தில் சுதேச வைத்திய நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான கட்டணங்களை நிர்ணயித்தல்;

(இ) எவரேனும் ஒருவர் சுதேச வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள்;

(ஈ) வட மாகாணத்தில் சுதேச வைத்திய நிறுவனங்களாக/சுதேச வைத்திய சேவை செய்யும் ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்காக பாவிக்கப்பட வேண்டிய பதிவேடு, படிவப் பத்திரம் மற்றும் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தலுக்காக உபயோகிக்கப்படும் படிவப் பத்திரங்கள்;

(உ) இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக அவசியமானதான வேறு எந்த விடயமும்.

(ii) ஆக்கப்படும் எல்லா விதிகளும் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்படும் திகதி முதல் அல்லது அதில் குறித்துரைக்கப்பட்ட பிறிதொரு தினத்திலிருந்து அது நடைமுறைக்கு வரும்.

(iii) விதிக்கப்படும் எல்லா ஏற்பாடுகளும் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுவதன் பின் மூன்று மாத காலத்திற்குள் அனுமதிக்காக மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகும்.

(iv) அவ்வாறு அனுமதிக்கப்படாத எல்லா விதிகளுமே அதற்கமைவாக குறித்த திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட விடயங்களுக்கு பாதகம் இல்லாமல் அமைவதுடன் அனுமதி மறுக்கப்பட்ட திகதியிலிருந்து வலுவற்றதாகக் கருதப்படும்.

26. இந்த நியதிச் சட்டத்தின் கீழேயான செயல்கள், செய்பணிகள் மற்றும் அதிகாரங்கள், செயலாளருடைய மேற்பார்வைக்கு, பரிசோதனைக்கு மற்றும் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு ஆணையாளரினால் நிறைவேற்றப்பட வேண்டியதாகும். செயலாளருடைய செயற் பொறுப்பு.

27. இந்த நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கு இடையில் ஏதும் ஒத்துப் போகாத தன்மை ஏற்பட்டால் அவ்விடத்து தமிழ் மொழி உரையே மேலோங்கியதாக இருத்தல் வேண்டும். ஒத்துப் போகாத தன்மை ஏற்பட்ட விடத்து தமிழ் மொழி வாசகம் மேலோங்குதல் வேண்டும்.

28. சொற்கள் தொடர்பாக வேறு அர்த்தங்கள் தேவைப்பட்டாலொழிய இந்த நியதிச் சட்டத்தில், பொருள் கோடல்.

'மாகாணம்' என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வட மாகாணம் ஆகும்.

'மாகாண சபை' என்பது வட மாகாணத்தின் மாகாண சபையாகும்.

'ஆளுநர்'என்பது வட மாகாணத்தின் ஆளுநராவார்,

'விடயப் பொறுப்பு அமைச்சர்' என்பது வட மாகாணத்தின் மாகாண சபையின் சுதேச வைத்திய விடயம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அமைச்சராவார்.

'செயலாளர்' என்பது சுதேச வைத்திய விடயப் பொறுப்பு மாகாண அமைச்சின் செயலாளராவார்.

'ஆணையாளர்' என்பது வட மாகாண சபையின் சுதேச வைத்தியத் திணைக்களத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள சுதேச மருத்துவ ஆணையாளராவார்.

'சுதேச வைத்தியம்' என்பது இலங்கையின் சுதேச பாரம்பரிய வைத்தியம், சித்த, ஆயுள்வேதம், யுனானி யோகா முறைகள் அல்லது இலங்கையின் முறையான அனுமதியுடன் பராமரித்துக் கொள்ளப்படும் வேறு

வெளிநாட்டினால் ஏற்றுக் கொள்ளப்படும் அல்லது சர்வதேச ரீதியாக மாற்று வைத்திய முறை அல்லது வைத்திய முறையாக உடன்பட்டுள்ள இயற்கை மற்றும் முழுமையான தத்துவம் மற்றும் நேரொத்த சிகிச்சை முறை, சுகப்படுத்தும் சாஸ்திர சுகாதார சிகிச்சை முறையாகும்.

'சுதேச வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள்' என்பது சுதேச வைத்தியர்கள்,யோகாசன முறைப் பயிற்றுவிப்பாளர்கள், மருந்தாளர்கள், பரிசாரகர்கள் மற்றும் பஞ்சகர்ம தொழில்நுட்பவியலாளர்கள், மர்த்தனவியலாளர்கள் ஆகியோராவர்.

'சுதேச வைத்திய தொழில் புரிபவரொருவர்' என்பது இலங்கையின் சுதேச பாரம்பரிய வைத்தியம், சித்த, ஆயுள்வேதம், யுனானி யோகாசன முறை அல்லது இலங்கையின் முறையான அனுமதியுடன் பராமரித்துக் கொள்ளப்படும் வேறு வெளிநாட்டினால் ஏற்றுக் கொள்ளப்படும் அல்லது சர்வதேச ரீதியாக மாற்று வைத்திய முறை அல்லது வைத்திய முறையாக உடன்பட்டுள்ள இயற்கை மற்றும் முழுமையான தத்துவம் மற்றும் நேரொத்த சிகிச்சை முறை, சுகப்படுத்தும் சாஸ்திர சுகாதார சிகிச்சை முறைகளில் ஈடுபட்டுள்ள வர்களான ஏதும் தொழில் புரிபவராவார்.

'சுதேச வைத்திய நிறுவனங்கள்' என்பது இந்த நியதிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) மற்றும் (2) பந்திகளின் கீழ் காட்டப்பட்டுள்ள விதத்தில் மாகாணத்தின் சுதேச வைத்திய திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டதான அரசாங்க மற்றும் தனியார் பகுதியின் சுதேச வைத்தியசாலைகள், மருந்தகங்கள், மத்திய சிகிச்சை நிலையங்கள்,சுதேச வைத்திய பஞ்சகர்ம மத்திய நிலையங்கள், சுதேசவைத்திய உடற் சிகிச்சை சேவை நிறுவனங்கள்,யோகாமுறை சேவை நிலையங்கள்,சுதேச வைத்திய மருந்துகள் அல்லது உபகரணங்களைச் சந்தைப்படுத்தும் விற்பனை நிலையங்களைக் குறிக்கும்.

'சுதேச மருத்துவ உற்பத்தி' என்பதில் சித்த, ஆயுள்வேத, யுனானி, பாரம்பரிய மருத்துவம் சார் மருந்துப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், உணவுப் பொருட்கள் என்பன உள்ளடங்கும்.

4-709

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.